1993 பிப்ரவரி 13]

2. பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் திரு. ம. சின்னசாமி.

திரு. ம.சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

1. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984—85 மற்றும் 1985—86 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1991—92) அளித்த பதினைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு நடவடிக்கை பற்றிய 88-வது அறிக்கை.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982—83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1989—90) அளித்த பதினெட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய 89-வது அறிக்கை.

3. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970—71-ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (வணிகம்) தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழு (1991—92) அளித்த 28-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய 90-வது அறிக்கை.

4. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1985—86 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறை (தமிழ்நாடு இறைச்சிக் கழகம்) தொடர்பான பத்திகள் மீதான 91-வது அறிக்கை.

5. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1985—86 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) உள்துறை தொடர்பான பத்திகள் மீதான 92-வது அறிக்கை.

[திரு. ம. சின்னசாமி] [1993 பிப்ரவரி 13

6. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982—83ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) போக்குவரத்துத் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1989—90) அளித்த 25-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைமீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய 93-வது அறிக்கை.

7. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1985—86ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை தொடர்பான பத்திகள் மீதான 94-வது அறிக்கை.

8. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1985—86ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பொதுப்பணித் துறை தொடர்பான பத்திகள் மீதான 95-வது அறிக்கை.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடர்ச்சி. திரு. இளம் வழுதி. நேற்றைக்கே உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருந்தது, நீங்கள் உடல் நலம் சரியில்லை என்று சொன்னதால் அதை ஏற்றுக்கொண்டு இன்று வாய்ப்பு வழங்கப்படுகிறது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனமுவந்து தாங்கள் அளித்திருக்கின்ற வாய்ப்புக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரை குறித்து நடைபெறுகின்ற விவாதத்திலே கலந்துகொண்டு, நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்திலே பதிய வைப்பதற்கான வாய்ப்பு தந்ததற்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு மாநில சட்டமன்றத்தில் ஆளுநர் உரை நிகழ்த்துவது என்பது ஆளுகிற கட்சி தீட்டியிருக்கிற திட்டங்களையும், அது செய்யக் கருதியிருக்கிற காரியங்களை எடுத்துச் சொல்வதற்கும், செய்து முடித்திருக்கிற காரியங்களைப் பட்டியல் போட்டுத் தருவதற்குமான வாய்ப்பாகும். எதிர்க் கட்சியிலே இருக்கிற நாங்கள் மக்களின் பிரதிநிதிகள் என்ற வரையில் எங்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிற உரிமையைப் பயன்படுத்தி, அரசு செய்திருக்கிற காரியங்களில் எங்களுக்கு இருக்கிற கருத்து மாறுபாடுகளைச் சுட்டிக் காட்டவும், செய்ய இருக்கின்ற காரியங்களில் தேவை என்று நாங்கள் கருதுகின்ற மாறுதல்களை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல இதைப் பயன்படுத்த வேண்டுமென்பதுதான் இந்த மரபை உருவாக்கியவர்களின் கருத்தாகும்.